1970 மார்ச் 30]

பீ. அளகாபுரி கூட்டுறவு பால்வழங்கு சங்கம்

*594 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ள பீ. அளகாபுரி கூட்டுறவுப் பால் பண்ணையின் நிலை பற்றி ஏதேனும் வழக்கு இருக்கிறதா?

(இ) எவ்வளவு காலமாக வழக்கு நடைபெறுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) பீ. அளகாபுரி பால் வழங்கு கூட்டுறவு சங்கத்தின் அலுவல்கள் குறித்து விசாரணை நடத்தும்படி, திருச்சி துணைப் பதிவாளர் (பால்பண்ணை) 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் தேதி அன்று கட்டளையிட்டார். சங்கத்தின் முன்னாள் தலைவர் ரூ. 3,354·43 அளவிற்குப் பணம் கையாடல் செய்து பொய்க்கணக்குக் காண்பித்ததாக விசாரணையில் தெரிய வந்ததால், புலன் விசாரணை நடத்தி சட்டப்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக இது காவல் துறையின் ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புலவர் பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அளகாபுரி பால்வழங்கு கூட்டுறவுப் பண்ணை ஒழுங்காக நல்ல முறையில் நடைபெறுவதற்கு, நடவடிக்கைகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ந் தேதியில்தான் காவல்துறையிடம் தகவல் சேகரிக்க கொடுக்கப்பட்டிருக் கிறது. அங்கிருந்து தகவல் வந்தவுடன் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

உணவுப் பொருள் வழங்குதுறையிலுள்ள அரசாங்க லாரிகள்

*595 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவு இலாகாவுக்குச் சொந்தமான அரசாங்க லாரிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உணவுப்பொருள் வழங்குதுறைக்குச் சொந்தமாக முப்பத்தாறு லாரிகள் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவற்றில் சென்னையில் மட்டும் எத்தனை லாரிகள் இருக்கின்றன? மாவட்டங்களில் எவ்வளவு? சென்னையில் நம்மிடம் லாரிகள் இருக்கும்போது காண்டிராக்ட் லாரியில் ஏற்றி சமீபத்தில் 1,045 அரிசி மூட்டைகள் காணாமற்போகும்படியான நிலைமை ஏன் ஏற்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னையில் மத்திய சர்க்கார் கோடவுனில் இருந்து சரக்கு கொண்டுவர லாரிகள் பயன்படுத்தப்படவில்லை. காண்டிராக்ட் லாரி மூலமே ஏற்பாடு செய்யப்படுகிறது. நம்முடைய லாரிகள் பெரும்பாலும் மாவட்டங்களில் இருந்து சர்க்கரை, அரிசி, நெல் போன்ற வற்றை அவ்வப்போது உடனுக்குடன் கொண்டு வரவே பயன்படுத்தப் படுகின்றன.

போத்த நதி கிராம ஆற்றின் குறுக்கே பாலம்

*605 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு உள்ளாட் சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—